சுருக்கம்

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - பதிவுத்துறை - திருநெல்வேலி பதிவு மாவட்டம் - கருணை அடிப்படையில் 29.09.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்ட திரு.க.வரதராஜபெருமாள் என்பவரின் பணியை வரன்முறை செய்து - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவுத் (எம்.2) துறை**

**அரசாணை (டி) எண்.25**

**நாள் 22.01.2024**
**சோபகிருது, தை - 8,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2055.**
**படிக்க:**

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் நலன் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. பதிவுத்துறை தலைவரின் நடவடிக்கைகள் எண்.9441/கே2/2022, நாள் 22.09.2022.
3. பதிவுத்துறை தலைவரின் கடிதம் எண்.9441/கே2/2022, நாள் 02.01.2024.

-----------

**ஆணை:**

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட பதிவுத்துறை தலைவரின் கடிதத்தில், பதிவுத்துறையில், திருநெல்வேலி பதிவு மாவட்டம், 2 எண் சார்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிகையில், 17.09.2020 அன்று பணியிடை மரணமடைந்த திரு.பெ.கண்ணன் என்பவரின் மகன் திரு.க.வரதராஜபெருமாள் என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்க கோரி 27.12.2021 நாளிட்டு விண்ணப்பம் அளித்துள்ளார் என்றும், அன்னாரது கோரிக்கை கருணை அடிப்படையிலான பணி நியமனம் வழங்குவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து சான்றுகள்/ஆவணங்கள்/ முன்மொழிவுகள் மற்றும் நடைமுறையிலிருந்த அரசாணைகளின்படி, பரிசீலனை செய்யப்பட்டு, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்படுவதற்குரிய கல்வி மற்றும் வயது தகுதிகளை திரு.க.வரதராஜபெருமாள் பெற்றிருந்தபடியால், அவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட பதிவுத்துறை தலைவரது நடவடிக்கைகளில் பணிநியமனம் வழங்கி ஆணை வழங்கப்பட்டுள்ளது என்றும்,

அதனையடுத்து திரு.க.வரதராஜபெருமாள் 29.09.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். எனவே திரு.க.வரதராஜபெருமாள் இளநிலை உதவியாளர் என்பவரின் தற்காலிகப் பணியினை அவர் பணியில் சேர்ந்த 29.09.2022 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்த பதிவுத்துறை தலைவர் கோரியுள்ளார்.

2. பதிவுத்துறை தலைவரின் கருத்துரு கவனமுடன் ஆய்வு செய்யப்பட்டு, திருநெல்வேலி பதிவு மாவட்டம், 2 எண் சார்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிகையில், 17.09.2020 அன்று பணியிடை மரணமடைந்த திரு.பெ.கண்ணன் என்பவரின் மகன் திரு.க.வரதராஜபெருமாள் என்பவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பதிவுத்துறையில் திருநெல்வேலி பதிவு மாவட்டத்தில் கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 29.09.2022 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அவரது பணியை வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணி வரன்முறைப்படுத்துவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவைத் தொகை பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.ஜோதி நிர்மலாசாமி
அரசு செயலாளர்

<u>பெறுநர்:</u>

பதிவுத்துறை தலைவர், சென்னை-28. (இணைப்புடன்)
திரு.க.வரதராஜபெருமாள்,
இளநிலை உதவியாளர்,
திருநெல்வேலி பதிவு மாவட்டம்,
(பதிவுத்துறை தலைவர், சென்னை-28 மூலமாக)
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

துணை பதிவுத் துறைத் தலைவர்
திருநெல்வேலி மண்டலம்